**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.08.2025**
**OS. No. 27/2022**
**வழக்கு சாட்சி PW.3–கோவிந்தன், த/பெ.கந்தசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்க அழைப்பாணை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. 2ம் வாதி ராஜேஷ் அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி வாதியிடம் சொத்து சம்மந்தமாக பிரச்சனை செய்ததாக நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் மற்றும் மற்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் பெயரில் என்ன ஆவணங்கள் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்ததில்லை. ஆனால் ஆவணம் உள்ளதாக எனக்கு தெரியும். அந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் சொத்தில் என்ன உரிமையுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் 2ம் வாதிக்கு ½ சென்ட் பிரதிவாதிக்கு ½ சென்ட் உள்ளதாக எனக்கு தெரியும்.

2) அவரவர்கள் பெயரிலுள்ள நிலத்தை மற்றவர்கள் கேட்க முடியாது என்றால் சரிதான், அதை அவரவர்களே வைத்து கொள்ளட்டும். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் வாதியும், பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை நடந்துகொண்டிருந்தது, நான் அருகில் சென்றபோது 2ம் வாதியிடம் சொத்தை கொடுக்கும்படி பிரதிவாதி கேட்டுக்கொண்டிருந்தார். அதன் பின்னர் பிரதிவாதி நிலத்தை வாங்காமல் விடமாட்டேன் என்று பிரச்சனை செய்தார். பிரச்சனை சம்மந்தமாக நானோ, வாதிகளோ ஏதேனும் புகார் அளித்துள்ளோமா என்றால், நான் கொடுக்கவில்லை அவர்களுக்குள் கொடுத்துள்ளார்கள்.

3) 2ம் வாதியின் பெயரில்தான் பிரதிவாதியை தாக்கி, ரத்தகாயம் ஏற்பட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி வாதிகளிடம் அவர்களுடைய சொத்தை கேட்கவில்லை என்றும், பிரதிவாதிக்கு உரிமையுள்ள சொத்தை தான் தரும்படி கேட்கிறார் என்றால் சரியல்ல. வாதிகள் பொய்யான சங்கதிகள் சொல்லி வழகது தாக்கல் செய்துள்ளார் என்றும், அவர் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் கூட எனக்கு தெரியவில்லை என்றும், ஆனால் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.